# தேடல்

# THEDAL

## வணிக சஞ்சிகை

## 2023

மலர் 05

இதழ் 01




வர்த்தகத் துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை.

ISSN: 2682-7328

**ஆசிரியர் குழுவிடமிருந்து ................**

கிழக்கு பல்கழைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட, வர்த்தகத்துறையினால் தேடல் எனும் இச்செய்தியேடு கடந்த பதினைந்து வருடங்களாக வெளியிடப்பட்டு வருகின்றது. பல்வேறு வேலைப்பழுவிற்கு மத்தியிலும் எமது துறை விரிவுரையாளர்களின் பெரும் ஒத்துழைப்புடன் ஓர் வணிகச்சஞ்சிகையாக மாற்றம்பெற்றபின் தற்பொழுது ஐந்தாவது மலரின் முதலாவது இதழை வெளியிடுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வெளியீட்டினூடாக உயர்தர வகுப்பு வணிகத்துறை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பதே எமது நோக்கமாகும். இவ்விதழில் எமது விரிவுரையாளர்களால் எழுதப்பட்ட வணிகம் மற்றும் நடைமுறை விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் அடுத்த வெளியீடுகளிலும் இவ்வாறான கட்டுரைகளும் வணிகச் செய்திகளும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் எமது முயற்சிக்கு உங்களது மிகுந்த ஆதரவுகளையும் நாம் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

**ஆலோசனைக் குழு**

திரு ரெ உதயகுமார்
(சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)

கலாநிதி சு பாலேந்திரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)

திருமதி சு சிறிதரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)

திரு த பரந்தாமன்
(சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)

கலாநிதி ந இராஜேஸ்வரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)

**வெளியீடு**

வர்த்தகத்துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**தொடர்புகள்**

பதிப்பாசிரியர்
திரு தே டினேஷ்
(தகுதிகாண் விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# உள்ளடக்கம்


01 அரச கடன் மறுசீரமைப்பு செயன்முறை 01 – 04
Debt Restructuring Process of the Government
திரு. தேவரஞ்சன் டினேஷ் (விரிவுரையாளர்)

02 இலங்கை கணக்கீட்டு நியமம் 16 05 – 10
ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
Property, Plan and Equipment
செல்வி சந்திரன் பேபிஜாலினி (தகுதிகாண் விரிவுரையாளர்)

# அரச கடன் மறுசீரமைப்பு செயன்முறை

# Debt Restructuring Process of the Government

திரு. தேவரஞ்சன் டினேஷ் (விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## அரச கடன் என்றால் என்ன?


அரச கடன் என்பது பொதுக் கடன் என்றும் அழைக்கப்படுகிறது, மேலும் இது பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச நாணய நிதியமானது (IMF) ''மொத்த கடன்" என்பதனை ''கடன் கருவிகளாக இருக்கும் அனைத்து பொறுப்புக்கள்" எனவும், ''கடன் கருவி" என்பதனை ''பெற்றுக்கொண்ட நிதியினை எதிர்காலத்தில் ஒரு தேதியில் அல்லது தேதிகளில் கடன்வழங்குனரினால் கோரப்படும் போது கடனாளி செலுத்த வேண்டிய வட்டி (கள்) மற்றும்/அல்லது அசல்" எனவும் வரையறுக்கின்றது.

பின்வரும் கருவிகள் கடன் கருவிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

1. சிறப்பு வரைதல் உரிமைகள் (SDRs)
2. நாணயம் மற்றும் வைப்பு
3. கடன் பத்திரங்கள்
4. கடன்கள்
5. காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் தரப்படுத்தப்பட்ட உத்தரவாத திட்டங்கள்
6. செலுத்த வேண்டிய பிற கணக்குகள்

''பொதுக் கடன்'' அல்லது ''அரச கடன்" என்பதன் சரியான பொருள் அல்லது வரையறையானது ''கடன்'' என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் சூழலைப் பொறுத்தது. வரைபடம் 1 இல் அரசதுறை மற்றும் அதன் கூறுகளின் வகைப்பாடு காட்டப்படுகின்றது.

தற்போது இலங்கை மத்திய வங்கியால் (CBSL) திரட்டப்பட்ட கடன் ''பாதிடப்பட்ட மத்திய அரசின் கடன்" வகையின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் பிற துறைகளின் சார்பாக, மத்திய வங்கியானது கடனை உயர்த்த வேண்டியிருந்தால், கடன்பெறும் சூழலின் அடிப்படையில் கடனுக்கான பரந்த வரைவிலக்கணத்தினை பயன்படுத்தப்படலாம்.




1 சமூக பாதுகாப்பு நிதியினையும் உள்ளடக்குகின்றது
2 மாறாக, சமூக பாதுகாப்பு நிதிகளினை இணைத்து ஓர் தனியான துணைத்துறையாக உருவாக்கமுடியும் (கோடிட்ட வரிப்பெட்டியினுள் காட்டப்பட்டது போல)
3 பாதீட்டு அலகுகள், கூடுதல் பாதீட்டு அலகுகள் மற்றும் சமூக பாதுகாப்பு நிதிகள் என்பன மாநில மற்றும் உள்ளூர் அரசாங்கங்களிலும் காணப்படுகின்றன

வரைபடம் 1: அரசதுறை மற்றும் அதன் கூறுகளின் வகைப்பாடு

## கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன?

கடன் மறுசீரமைப்பு என்பது கடன் நிலைத்தன்மையை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான செயல்முறையாகும், மேலும் கடன் நிலைத்தன்மையை மீண்டும் பெறுவதற்கான வேறு எந்த விருப்பமும் அரசியல் ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ ஏற்றுக்கொள்ள முடியாததாக கருதப்படும்போது மறுசீரமைப்பு முடிவு எடுக்கப்படுகிறது.

கடன் மறுசீரமைப்பு என்பது பின்வரும் நோக்கங்களை கொண்டமையப்பெற்றுள்ளது:

1. மொத்த நிதித் தேவைகளினை (GFNs) நிர்வகிக்கக்கூடிய நிலை
2. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன் சேவைகளின் நிர்வகிக்கக்கூடிய நிலை
3. நடுத்தரம் முதல் நீண்ட காலத்திற்கு, குறைவடையும் கடனுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) விகிதத்தினை நிர்வகிக்கக்கூடிய நிலை

## கடனை எவ்வாறு குறைப்பது / மறுசீரமைப்பது?

கடன் மறுசீரமைப்பு முடிவு எடுக்கப்பட்டவுடன், கடனாளியானவர் மறுசீரமைப்பு தொடர்பான எந்த நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டும், மற்றும் எந்த நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும். மறுசீரமைப்பிற்கு உட்பட்ட இறுதி நிபந்தனைகள் (final claims) பல்வேறு காரணிகளைப் பொறுத்தது.

கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் எந்த நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்தவுடன், அமுலாக்கம் தொடர்பாக பின்வரும் முறைகள் மற்றும் வகைகள் பயன்படுத்தப்படும்.

1. முகப் பெறுமதிக் குறைப்பு (Face Value Reduction) – முகப் பெறுமதிக் குறைப்பு என்பது பொதுவாக மிகவும் அதிகப்படியான சீராக்கமாகும். அதாவது இது கடனாளிக்கு அதிகபட்ச நிவாரணத்தை அளிக்கிறது. "ஹேர்கட்" என்றும் அழைக்கப்படும், நிலுவையில் உள்ள கடனின் பெயரளவுப் பெறுமதி குறைக்கப்படுகிறது.

2. முதிர்வு நீட்டிப்பு (Maturity Extension) - முதிர்வு நீட்டிப்புகள், 'reprofiling' என்றும் அழைக்கப்படுகின்றன, இது "ஹேர்கட்" முறைமையைவிட குறைவான சீராக்கமாகும். இம்முறையானது, கடனின் பெயரளவுப் பெறுமதியில் மாற்றங்கள் செய்யாமல், இறுதி முதல்கட்டணத்தை (principal payment) மீளச்செலுத்த வேண்டிய தேதியை மட்டும் மாற்றுவதாகும். பணம் செலுத்தும் காலத்தை நீடிப்பதன் மூலம், கடனாளி தேறிய இற்றைப் பெறுமதிக் குறைப்பு (NPV) மூலம் அனுகூலமடைவதோடு (இது பயன்படுத்தப்படும் கழிவீட்டுக் காரணியைப் பொறுத்தது) குறுங்கால திரவத்தன்மைப் பிரச்சனைகளையும் தணிக்க உதவும்.

3. வட்டிவீத சீராக்கம் (Coupon Adjustment) – வட்டிவீத சீராக்கமானது கடனாளிக்கு சில ஆறுதல்களை (தேறிய இற்றைப் பெறுமதி குறைப்பு) வழங்குகின்றது. ஆனால் இங்கு முகப்பெறுமதிக் குறைப்போ அல்லது முதிர்வுத் திகதி நீட்டிப்போ செய்யப்படுவதில்லை. இம்மூன்று முறைகளில், இது மிகவும் குறைந்தபட்ச நிவாரணத்தை வழங்கக்கூடும்.

இந்த மூன்று முறைகளும் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமானவை அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் உண்மையில், பெரும்பாலான மறுசீரமைப்புகள் மூன்று வகைகளின் கலவையைப் பயன்படுத்தி, கடனளிப்பவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழலில் விரும்பிய அளவிலான நிவாரணத்தை அடையக்கூடியதாக காணப்படும்.

மிக முக்கியமாக, கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்கள் கடனளிப்பவர் மற்றும் கடனாளியின் பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

***உசாத்துணைகள்***

Central Bank of Sri Lanka. (2023). *Crisis Communication: Debt Restructuring Process of the Government.* Retrieved from https://www.cbsl.gov.lk/en/crisis-communication/government-debt

# இலங்கை கணக்கீட்டு நியமம் 16
# ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
# Property, Plant and Equipment

செல்வி சந்திரன் பேபிஜாலினி (தகுதிகாண் விரிவுரையாளர்)
வணிகத்துறை, வணிக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## 01. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - வரைவிலக்கணம்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு அல்லது விநியோகத்திற்காக வைத்திருக்கின்ற அல்லது ஏனையவர்களுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது நிர்வாக ரீதியான கருமங்களுக்கு வைத்திருக்கின்ற ஒரு நிதியாண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற கட்புலனாகும் சொத்துக்கள் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் எனப்படும்.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்படாத சொத்துக்கள்

- விற்பனைக்கு என வகைப்படுத்தப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
- விவசாய நடவடிக்கைகளுக்கான உயிரின சொத்துக்கள்
- எண்ணெய், இயற்கை வாயு, கனிப் பொருட்கள், உரிமைகள்

## 02. இ.க.நி - 16 நோக்கம்

ஒரு வணிகத்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான முதலீட்டு மாற்றங்கள் சம்பந்தமான தகவல்களை நிதிக்கூற்றுக்களின் பாவனையாளர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்தல்.

## 03. ஏற்பிசைவு (Recognition)

ஒரு சொத்து கொள்வனவு செய்யும் போது அல்லது நிர்மானிக்கும் போது வழங்கப்படும் காசுத்தொகை அல்லது காசுக்கு சமமானவை அல்லது வேறு பிரதியீட்டம் கிரயம் ஆகும். ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் அலகுக் கிரயம் சொத்தாக ஏற்பிசைவு பின்வரும் சந்தர்ப்பங்களில் செய்யப்படும்.

1. எதிர்கால பொருளாதார பயன்கள் வணிகத்திற்கு சேரக்கூடிய சாத்தியங்கள் இருக்குமானால்
2. உருப்படியின் கிரயம் நம்பகரமாக முடியுமானால்

## 04. கிரயம்

ஒரு சொத்து கொள்வனவு செய்யும் போது அல்லது நிர்மானிக்கும் போது வழங்கப்படும் காசுத்தொகை அல்லது காசுக்கு சமமானவை அல்லது வேறு பிரதியீட்டம் கிரயம் ஆகும்.

***கிரய ஆக்கக்கூறுகள்***

வியாபாரக் கழிவுகள் தள்ளுபடிகள் கழித்த பின் கொள் முதல் விலை மற்றும் இறக்குமதி வரிகள். இயக்குவதற்கு ஏற்ற வகையில் சொத்தை அதன் அமைவிடத்திற்கு கொண்டு வருவதற்கு நேரடியாக தொடர்புபடக் கூடிய கிரயங்கள்

**உதாரணம்:**

1. உட்காவுகை, போக்குவரத்துச் செலவு
2. பரீட்சாத்த உற்பத்திக் கிரயம், தொழில்சார் சேவைக்கட்டணம்

உருப்படியை கழற்றி அகற்றும் ஆரம்பக்கிரயம் மற்றும் அதன் அமை-வடிவத்தை மீளமைத்தல் கிரயம்

**உதாரணம்:**

1. இடத்தயாரிப்புக் கிரயம்
2. நிர்மாணித்தல் கிரயம்

**ஆரம்பக் கிரயம்/ தொடக்கக் கிரயம் (Initial Cost) - அடுத்துவரும் கிரயம்/ பிற்காலக் கிரயம் (Subsequent Cost)**

குறித்த ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் எதிர்கால பொருளாதாரப் பயன்களைப் பெறுவதற்கு அவசியமான கிரயம் தொடக்கக்கிரயம் ஆகும். அதாவது குறித்த சொத்தை உருவாக்குவதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு ஏற்படும் நேரடிச் செலவீனங்களை இது குறிக்கின்றது. அடுத்துவரும் கிரயம் என்பது குறித்த ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்கு ஏற்படும் கிரயங்களைக் குறிக்கின்றது. இக்கிரயங்கள் இலாபநட்டக் கணக்கில் சீர் செய்யப்படும்.

**05. முன் கொணரும் தொகை/ தேறிய பெறுமதி**

முன் கொணரும் தொகை என்பது திரண்ட தேய்மானமும் திரண்ட ஊறு சேத இழப்புக்களும் கழித்த பின் ஒரு சொத்து தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை இதுவாகும். ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் கிரயம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியில் காசு விலைக்குச் சமமானது. எனவே இக்கிரயத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட கிரய ஆக்கக் கூறுகளையும் உள்ளடக்கி முன் கொண்டு செல்லும் தொகை தீர்மானிக்கப்படும்.

தவணை அடிப்படையில் கொள்வனவு செய்யும் போது உடன் காசு விலைக்கும் மொத்த கொடுப்பனவிற்கும் இடையிலான வித்தியாசமான வட்டி முன் கொணரும் தொகையில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**06. ஆதனம், பொறி உபகரணங்களை அளவிடும் முறைகள்/ முன் கொணரும் தொகை பின்வரும் இரு முறையில் தீர்மானிக்கப்படும்.**

***கிரய உருமாதிரி:*** ஒரு சொத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் ஓர் உருப்படி திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய ஊறு இழப்புக்களை கிரயத்திலிருந்து கழித்து முன் கொண்டு செல்லப்படும்.

***மீள் மதிப்பீட்டு மாதிரி:*** ஒரு சொத்தாக ஏற்றுக் கொள்ளபட்ட பின் ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்களின் உருப்படி ஒன்றின் நியாயமான பெறுமதி நம்பகரமாக அளவிட முடியுமானால் தொழில் சார் மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்டு அத்தொகை முன் கொண்டு செல்லப்படும். இம் மதிப்பீட்டு பெறுமதி சந்தைப் பெறுமதி ஆகும். இச்சொத்தின் முன் கொணரும் தொகை மீள் மதிப்பீடு காரணமாக அதிகரிக்கப்பட்டால் அந்த அதிகரிப்பு மீள்மதிப்பீட்டு மிகை என்ற தலைப்பில் உரிமையாண்மையுடன் சேர்க்கப்படும். முாறாக மீள்மதிப்பீட்டுப்பெறுமதி குறைவாயின் அக்குறைவு இலாப நட்டக்கணக்கில் நட்டமாக சீர்செய்யப்பட வேண்டும்.

## 06. தேய்மான முறைமை (Depreciation Method)

தேய்மானம் என்பது ஒரு சொத்தின் தேய்மானத்திற்கு உள்ளாகும் தொகையை அதன் பயனள்ள ஆயுட்காலத்திற்கு ஒழுங்கு முறைப்படி ஒதுக்குவது ஆகும்.

ஒவ்வொரு காலப்பகுதிக்கான தேய்மானத் தொகை இச் சொத்தின் முன் கொணரும் தொகையில் உள்ளடக்கப்படா விட்டால் அக்காலத்திற்கான இலாப நட்டத்தில் சீர் செய்யப்படும்.

***நேர்கோட்டு முறை***: சொத்தின் பயன்தரு ஆயட்காலம், கழிவுப் பெறுமதி மாறாத போது தேய்விடக் கூடிய பெறுமதியை பயன்தரு ஆயட்காலத்திற்கு ஒரே மாறாத தொகையை தேய்மானம் செய்வதைக் குறிக்கின்றது.

$$\text{பெறுமானத்தேய்வு} = \frac{\text{கிரயம் - கழிவுப் பெறுமதி}}{\text{பயன் தரு ஆயுட்காலம்}}$$

***குறைந்து செல் மீதி அடிப்படை முறை:*** சொத்தின் தேய்விடக் கூடிய பெறுமதியை பயன்தரு ஆயட்காலத்தின் இடையே குறைந்து செல்லும் தொகையின் அளவுகளால் தேயவிடப்படுவதனை இது குறிக்கும்.

$$\text{பெறுமானத்தேய்வு வீதம்} = 1 - \sqrt[Years]{\frac{SalvageValue}{Cost}}$$

Salvage Value = இழிவுப்பெறுமதி

Cost = கிரயம்

***உற்பத்தி அலகுகள் அடிப்படை முறை***

எதிர்பார்க்கப்பட்ட பாவனை உற்பத்தி வெளியீடு அடிப்படையில் தேய்மானம் அமையும். குறித்த சொத்திற்கு உபயோகிக்கப்படும் தேய்மாக முறை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட்டு சொத்தில் அடங்கியுள்ள எதிர்கால பொருளாதார பயன்கள் நுகர எதிர்பார்க்கப்பட்ட பங்கில் குறிப்பிட்ட மாற்றங்கள் இருப்பின் அம்மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் பெறுமானத் தேய்வு முறையும் மாற்றப்பட வேண்டும். (இ.க.நி—8 கணக்கீட்டு மதிப்பில் மாற்றம்)

**தேய்மானத்திற்குள்ளாகும் தொகையும், தேய்மானக் காலமும் (Depreciable Amount and Depreciation Period)**

**தேய்மானத்திற்குள்ளாகும் தொகை / தேய்விடக்கூடிய தொகை**

ஒரு சொத்தின் கிரயத்திலிருந்து இழிவுப் பெறுமதியை கழித்து வரும் தொகை தேய்விடக் கூடிய தொகையாகும். இழிவு பெறுமதி மிகவும் அற்பமானதாக இருப்பதால் தேய்மானத் தொகையைக் கணிப்பதில் பொருண்மையற்றது.

தேய்விடக்கூடிய தொகை = கிரயம் - இழிவுப் பெறுமதி

அல்லது

தேய்விடக்கூடிய தொகை = கிரயம் - (இழிவுப் பெறுமதி + ஆரம்ப திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு)

ஒரு சொத்தின் இழிவுப் பெறுமதியும் அதன் ஆயுட் காலமும் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட்டு முன்னைய மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்ப்புக்கள் மாறுபடுமானால் மாற்றங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 8 இற்கமைய கணக்கீடு செய்ய வேண்டும்.

**07. பயன்தரு ஆயுட்காலம்**

ஒரு சொத்தினை பயன்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் அல்லது சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தி பயன்தரு ஆயுட்காலம் ஆகும்.

**பயன்தரு ஆயட்காலத்தினை தீர்மானிக்கும் காரணிகள்**

- சொத்தின் பௌதீக உற்பத்தி மற்றும் எதிர்பார்க்கப்படும் இயல்பு
- பாவனைக்குள்ளாகும் வேலைச் சுழற்சிஇ சீராக்கம்இ பராமரிப்புத் திட்டம்இ பாவனையில்லாத போது கவனமெடுத்தலும் பேணுதலும்
- தொழில் நுட்ப மேம்பாடு
- குத்தகையின் திகதி முடிவு

**08. இழிவுப் பெறுமதி / எஞ்சிய பெறுமதி**

சொத்தின் பயன்தரு ஆயட்கால முடிவில் அச் சொத்தினை அகற்றுவதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பெறுமதியில் இருந்து அவற்றை அகற்றுவதற்கு ஏற்படும் எதிர்பார்க்கப்பட்ட செலவை கழித்து வரும் பெறுமதி இழிவுப் பெறுமதி ஆகும்.

**09. உரிமம் குறிப்பிட்ட பெறுமதி (Entity Specific Value)**

ஒரே சொத்தினை தொடர்ந்து உபயோகிப்பதால் பெறக்கூடும் என எதிர்பார்க்கும் காசுப்பாய்வு மற்றும் அதன் பயனுள்ள ஆயுட்கால முடிவில் விற்பனை செய்யும் பொழுது பெறக்கூடிய காசு ஆகியவற்றின் தற்போதைய பெறுமதி உரிமம் குறிப்பிட்ட பெறுமதி ஆகும்.

**10. நியாயமான பெறுமதி (Fair Value)**

ஒரு சொத்தை உறவு முறை சார்பில்லாத, கொடுக்கல் வாங்கலில் அறிவு படைத்த, சுயவிருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுகின்ற பகுதியினருக்கு மாற்றிப்பெறப்படும் தொகை நியாயமான ஆகும்.

**11. சேத இழப்பு / ஊறு (Impairment)**

ஒரு சொத்தின் முற்கொணரும் தொகை அதன் மூலம் அறவிடக்கூடிய தொகையினை மிஞ்சிய தொகை சேத இழப்பு ஆகும்.

**12. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பிடுதல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படி ஒன்றினை மீள்மதிப்பீடு செய்யும் போது அவ்உருப்படியின் வகுப்பினைச் சேர்ந்த அனைத்துச் சொத்துக்களும் மீள் மதிப்பிடல் வேண்டும்.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஒரு வகுப்பு என்பது ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டில் ஒத்த வகைப்பட்ட தன்மையும் உபயோகமும் உள்ள சொத்துக்களின் தொகுதியாகும்.

**பின்வருவன தனியான வகுப்புக்களுக்கு உதாரணங்களாகும்.**

- காணி
- காணியும் கட்டிடமும்
- இயந்திரங்கள்
- கப்பல்கள்
- வானூர்திகள்
- மோட்டார் வாகனங்கள்
- தளபாடங்கள் பொருத்துக்கள்

ஒரு சொத்தின் முன் கொண்டு செல்லப்படும் தொகை மீள் மதிப்பீடு காரணமாக அதிகரிக்கப்பட்டால் அந்த அதிகரிப்பு மீள்மதிப்பீட்டு மிகை என்ற தலைப்பில் உரிமை மூலதனத்துடன் காட்டுதல் வேண்டும்.

சொத்து மீள் பதிப்பிடலின் காரணமாக முன் கொண்டு செல்லப்படும் தொகை குறைவடையுமாயின் அக்குறைவடையும் பெறுமதி செலவாக காட்டப்படுதல் வேண்டும். இருந்த போதிலும் குறித்த சொத்து தொடர்பில் மீள் மதிப்பீட்டு மிகையாக வைத்திரக்கப்படும் தொகையில் இருந்து அத்தொகையின் அளவிற்கு தற்பொது மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டுக் குறைவினை பதிவழிப்புச் செய்ய முடியும்.

**13. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் நிதிக்கூற்று வெளிப்படுத்தல்கள்**

1. மொத்த முன் கொணரும் தொகையும் , திரட்டிய தேய்மானமும்
2. தேய்மானத் தொகை பாவித்த தேய்மான முறைகள்
3. பயன்தர ஆயுட்காலம் அல்லது பாவித்த தேய்மான வீதங்கள்

4. சேர்ப்புக்கள்
5. கொள்வனவு விற்பனைகள்
6. வியாபார இணைப்பின் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள்
7. மீள் விலை மதிப்பு மிகை அல்லது குறைவு
8. பொறுப்புக்களுக்கு பிணையாக வழங்கப்பட்ட ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தொகை மற்றும் உரிமையின் மட்டுப்படுத்தல்கள்
9. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் உருப்படியொன்றின் முன்கொணரும் தொகையில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவீனங்கள்.
10. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் மற்றும் தொகைகள்
11. சேத இழப்பு தொடர்பாக மூன்றாம் பகுதியினரிடமிருந்து பெறப்பட்ட நட்ட ஈட்டுத்தொகை
12. இழிவுப் பெறுமதி, கிரயம், பயன்தரு ஆயட்காலம், தேய்மான முறைகள் தொடர்பான மதிப்பீட்டு மாற்றங்கள்.

***உசாத்துணைகள்***

Accounting & Auditing Standards Committees (2018). Sri Lanka Accounting Standard LKAS *16 Property, Plant and Equipment.*

Teachers Instruction Manual - Grade13 (2018). Educational Publications Department.

The Institute of Chartered Accountants of Sri Lanka (2020), Business Level I BL1 - *Financial Accounting* (Tamil) (1st ed.). Colombo, Sri Lanka: Author.